DEPOSITON OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
Assistant Sessions Judge, Sankari
IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

| | |
|---|---|
| Calender | } |
| Miscellaneous | } |
| Preliminary Register | } |
| Sessions | } Case No.SC. 178/2022 |

| | |
|---|---|
| Deposition of Witness | { PW 6 |
| | { Prosecution |
| | { |

| | |
|---|---|
| Name | : சிவபிரகாஷ் |
| Father's Name | : |
| Taluk | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 08.08.2023.

2023ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 08 ஆம் நாள் அரசு தரப்பு சாட்சி என்பவரின் சாட்சியாகிய அ.சா.6ன் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 44 வது சட்டத்தின் 4 வது பிரிவின் கீழ் திரு.ந.பன்னீர்செல்வம்,பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு சாட்சி விசாரிக்கப்படுகிறார்.

1 முதல் 3- ஆம் எதிர்கள் ஆஜர்

**<u>முதல் விசாரணை</u>**

நான் மேஸ்திரி காட்டில் வசிக்கிறேன். நான் சொந்த தொழில் செய்கிறேன். கடந்த 06.07.2020-ஆம் தேதியன்று மதியம் 2 மணிக்கு நான் என் வீட்டிலிருந்தேன். அப்போது அ.சா.5 சுரேஷ் என்பவர் என் வீட்டிற்கு என்னை பார்ப்பதற்காக வந்திருந்தார். சங்ககிரி போலீசார் ரத்தினவேலு, ஆஜர் எதிரிகளுக்கிடையே நடந்த அடி, தடி வழக்கு சம்பந்தமாக அங்கு வந்து என்னிடம் சம்பவம் பற்றி கேட்டார்கள். நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்று சொல்லிவிட்டேன். பின்பு போலீசார் என்னிடம் கையெழுத்து கேட்டார்கள். அதில் நானும், சுரேஷும் சாட்சி கையொப்பம் செய்தோம். அதில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது. பார்வை மகஜரிலுள்ள என்னுடைய

கையெழுத்து மட்டும் அ.சா.ஆ. 5 ஆகும். அன்று மாலை நானும், சுரேஷ்ம் மீண்டும் காவல்நிலையம் சென்றபோது எங்களிடம் எழுதப்பட்ட இரண்டு தாள்களில் கையொப்பம் வாங்கினார்கள். அதில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது. நான் கையெழுத்து மட்டும் செய்து கொடுத்தேன். ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள என்னுடைய கையெழுத்து அ.சா.ஆ- 6 ஆகும். கைப்பற்றுதல் மகஜரிலுள்ள என்னுடைய கையெழுத்து அ.சா.ஆ-7 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோள் படி சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டத்தின் அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

நான் போலீசார் விசாரணையின்போது கடந்த 06.07.2020- ஆம் தேதியன்று மதியம் சுமார் 2.00 மணிக்கு நான் என்னுடைய வீட்டில் இருந்ததாகவும் அப்போது என் நண்பர் சுரேஷ் அங்கு வந்திருந்ததாகவும், அப்போது ஆய்வாளர் அங்கு வந்து சம்பவம் பற்றி விசாரித்தபோது அன்று காலை 11 மணிக்கு அ.சா.1 ஐ ஆஜர் எதிரிகள் நிலம் சம்பந்தமாக பிரச்சனை செய்து அசிங்கமான கெட்டவார்த்தையால் திட்டியும், உன்னை கொல்லாமல் விடக்கூடாது என்று சொல்லி 2-ஆம் எதிரி பிடித்துக்கொள்ள, 3 ஆம் எதிரி கத்தியால் குத்தியதாகவும், அதில் அ.சா.1 க்கு வயிறு, மார்பு, தோள்பட்டை ஆகிய இடங்களில் இரத்த காயமானதாகவும், கேள்விப்பட்டேன் என்றும், பின்பு அன்று மதியம் 2 மணிக்கு போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தபோது அதற்கு சாட்சிய இருந்து நானும், சுரேஷ்ம் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும் அதன் பின்பு அன்றுமாலை சுமார் 6.30 மணிக்கு காவல் நிலையத்தில் வைத்து எதிரி வினேத்குமார் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தபோது ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் பதிவு செய்தபோது அதற்கும் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்ததாகவும், அதன் பின்னிட்டு அன்று இரவு 8 மணிக்கு எதிரி வினேத்குமார் தன் வீட்டில் மறைத்து வைத்திருந்த சம்பவத்திற்கு பயன்படுத்திய கத்தியை எடுத்து ஆஜர் செய்தபோது ஆய்வாளர் அதை மகஜரில் கைப்பற்றியதாகவும், அப்போது தான் சாட்சியாக இருந்து சாட்சி கையொப்பம் செய்தேன் என்று சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் எனக்கு உறவினர்கள் என்பதாலும், உள்ளூர்காரர்கள்

என்பதாலும் அவர்களை இந்த வழக்கிலிருந்து காப்பற்றவேண்டும் என்பதற்காக உண்மையை மறைத்து பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

ஒம்/-சிவபிரகாஷ்                                                  ஒம்/-திரு. ந. பன்னீர்செல்வம்,

சார்பு நீதிபதி, சங்ககிரி